REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

ரஷ்ய கல்வி இலாகாவில் இலஞ்ச ஊழல்!

உயர்தரக் கல்வி நிலையங்களில் தகுதியில்லாத மாணவர்களை அனுமதிப்பதற்காக சில அதிகாரிகள் இலஞ்சம் வாங்குகிறார்களாம்!

இதனை ரஷ்ய சஞ்சிகை ஒன்று தெரிவிக்கிறது.

போரிஸ் கோர் சாகின் என்ற ஒருவர், இந்த இலஞ்சக் குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டிருப்பதாகக் கூறும் அந்த

(4-ம் பக்கம் பார்க்க)

மலர் 5] சென்னை: கார்த்திகை 3உ திங்கள் (18—11—57) ★ ★ வெளியூர்: கார்த்திகை 4உ செவ்வாய் (19—11—57) [இதழ் 134

இந்தி வெறியருக்குக் கடும் எச்சரிக்கை!

ஆதிக்கத்தைத் தகர்த்திடுவேன்!

சமரசத் திட்டத்தைப் பாழாக்காதீர்—சமருக்கு இழுக்காதீர்!

தாரா சிங் போர்முரசு கேட்கிறது

பாஞ்சாலத்தில், சீக்கியர் தலைவராகப் பணியாற்றி ஈடில்லாச் செல்வாக்குடன் விளங்கும் மாஸ்டர் தாராசிங், மீண்டும் போர் முரசு கொட்டவேண்டிய கட்டம் ஏற்பட்டுவருகிறது.

தீவிரமான கிளர்ச்சிக்குப் பிறகு நேரு சர்க்கார், பாஞ்சாலத்தில் சீக்கியரும்—இந்துக்களும் சமரசமாக வாழ்ந்திடத் திட்டம் வகுத்தனர்.

மாஸ்டர் தாராசிங், அந்தத் திட்டம் சீக்கியரின் கோரிக்கை முழுவதையும் நிறைவேற்றுவதாக இல்லை என்றாலும், பொது நன்மையைக் கருதி, சமரசத் திட்டத்துக்கு இசைவு தந்தார்.

இது பொறாதவர்கள், சீக்கியரைச் சங்கடத்திலாழ்த்தும் நோக்குடன், இந்தி வெறியைக் கிளப்பிவிட்டு, பெருங் கிளர்ச்சி செய்து வருகிறார்கள்.

'இந்தக் கிளர்ச்சி, சீக்கியருக்குக் கேடுண்டாக்கும் நோக்கத்துடன் நடத்தப்படுகிறது' என்று மாஸ்டர் தாராசிங் பல தடவைகள் பேசியிருக்கிறார்.

பதிந்தா எனும் ஊரில் நடைபெற்ற கூட்டத்தில், மாஸ்டர் தாராசிங் கடும் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

"நான் இன்னமும் இந்தி ஆதிக்கத்தை எதிர்க்காமலிருக்கிறேன்.

"எங்கள் மத கிரந்தமேகூட குர்முகி வரி வடிவத்திலிருந்தாலும், இந்தி மொழியில் இருக்கிறது; அது குறித்துக்கூட நான் வருந்தவில்லை.

"ஆனால், அகில இந்திய மொழி என்று காரணம் கற்பித்துக்கொண்டு, இந்திக்கு ஆதிக்கம் தேடுகிறார்கள்.

"இந்த ஆதிக்கத்தை நிலைநாட்ட மொழி வெறியர்கள் கிளர்ச்சி நடத்துகிறார்கள்.

"இவர்கள் இந்தக் கிளர்ச்சியை இனியும் நிறுத்தாவிட்டால், நான் இந்தி எதிர்ப்பு அணியிலே சேர்ந்தாக வேண்டிய நிலைமை ஏற்படும்"

என்று மாஸ்டர் தாராசிங் பேசியிருக்கிறார்.

ஐம்பதாயிரம் சீக்கியர்களுடன் வா, அலங்கரிக்கப்பட்ட மோட்டாரில், மாஸ்டர் தாராசிங் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

உள்ளத்தில் ஒன்று—உதட்டில் ஒன்று!

உபதேசம் உலகைத் திருத்தாது!

'எம்மதமும் சம்மதம்'—ஏட்டளவுதானே!

மத மாநாட்டில் பண்டித நேரு

உலக மதவாதிகளின் மாநாட்டிலே, பண்டித நேரு கலந்துகொண்டு பேசியிருக்கிறார்.

உலக மதவாதிகள் மாநாட்டிற்கு, மாஸ்கோவும் பிரதிநிதியை அனுப்பி இருக்கிறது.

அனைவரும், 'எம்மதமும் சம்மதம்' என்ற தத்துவத்தையும், இம்சையை அறவே களைய வேண்டியது குறித்தும், உலகெங்கும் சாந்தியும், சமரசமும் நிலவ வேண்டும் என்பதை வலியுறுத்தியும் பேசினர்.

இந்த மாநாட்டில் நேரு பண்டிதர் பேசினார்.

'எனக்கு இங்கு என்ன வேலை என்று எனக்கே புரியவில்லை!'

என்ற முன்னுரையுடன் நேரு பண்டிதர் பேசியிருக்கிறார்.

"இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளிலே நான் கலந்துகொள்ளும் வாடிக்கை கிடையாது"

என்றும் நேரு பண்டிதர் தெரிவித்திருக்கிறார்.

எனினும், மனதிற்பட்டதையும் கூறிவிட்டு வந்திருக்கிறார்.

"தூய்மையான கொள்கைகளைக் காட்டினால் போதாது; ஏட்டில் தீட்டினால் போதாது; உலகுக்கு உபதேசித்தால் போதாது; அந்தக் கொள்கை வழி நீங்கள் நடந்துகாட்ட வேண்டும்!"

என்று நேரு பண்டிதர், அகில உலக மத மாநாட்டில் கூடியிருந்த 200-க்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டார்.

மாநாடு, டில்லி செங்கோட்டையில் நடைபெற்றது.

"பொதுவாகவே, உதட்டில் ஒன்றும் உள்ளத்தில் ஒன்றும் இருப்பதை நான் காணுகிறேன்; இது கண்டிக்கத்தக்கது.

"நமது மனமே, இருகூறுகளாக இருப்பதாக எனக்குத்

(1-ம் கலம் பார்க்க)

'விவசாயிகட்கு உதவி செய்வீரா?'

சந்தானம் கேள்விக்கு அமைச்சர் பதில்

சென்னை, நவ. 16—

"இராமநாதபுரம், முதுகுளத்தூர் பகுதியில், தீயினால் விவசாயக் கருவிகளை இழந்தவர்களுக்கு அரசாங்கம் உதவி அளிக்க முன்வருமா?"

என்று, மன்றத்தில் தோழர் பி. எஸ். சந்தானம் கேட்டார்.

"பாதிக்கப்பட்டவர்களுக்கு இப்போது ரூ. 100 தரப்படுகிறது; இதற்கென்று தனியாகத் தர வேண்டியதில்லை" என்றார், அமைச்சர்.

(5-ம் பத்தியின் தொடர்ச்சி)

தோன்றுகிறது. ஒன்று—ஊருக்கு உபதேசம் செய்வதற்கான கொள்கைகளை வைத்துக்கொண்டிருக்கவும் மற்றொரு கூறு—தன் சுயநலத்துக்காக எப்படி எப்படி நடக்க வேண்டும் என்ற நினைப்புகளைக் கொண்டதாகவும் இருக்கிறது.

"இந்த இரட்டை மனப்போக்கு, உலகைக் கெடுக்கும்"

என்பதாக நேரு பண்டிதர் பேசியிருக்கிறார்.

"எம்மதமும் சம்மதம் என்று ஏட்டளவில்தான் காணப்படுகிறது; உலகிலே மதச் சண்டைகள் பற்பல நடைபெற்றன என்பதையும், எண்ணற்றவர்கள் கொல்லப்பட்டனர் என்பதை எடுத்துக்காட்டியும், மதம் விஞ்ஞான உண்மைகளுக்கு முரண்படாததாக இருந்து தீரவேண்டும்"

என்றும், டாக்டர் ராதாகிருஷ்ணன் அந்த மாநாட்டிலே பேசினார்.

வயிறு வெடிக்கச் சாப்பிடுகிறார்களாம்!

வாயைக் கட்டு! வயிற்றைக் கட்டு!

கிடைத்ததைச் சாப்பிட்டுக்கிடங்கள்

அரிசி வேண்டுமாமே-கொடுத்துத் தொலையுங்களேன்

கருணைமூர்த்தி நேருவின் கண்டுபிடிப்புகள்

நேரு பண்டிதர், நவ. 17-ல் புதுடில்லியில் ஒரு யோகாஸ்ரம ஆண்டு விழாவைத் துவக்கிவைத்துப் பேசுகையில், 'தெற்கு' பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

தெற்கே உள்ளவர்களிடம் பரிவு காட்டிப் பேசுவதாகப் பாவனை காட்டிக்கொண்டே, 'தெற்கே உள்ளவர்கள், பெருந்திண்டிக்காரர்கள்' என்று கேலி பேசியிருக்கிறார்.

"அரிசிச் சாதத்தை இலை முழுதும் போட்டுக்கொண்டு சிலர் சாப்பிடுவதைப் பார்க்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது" என்று நேரு பண்டிதர் பேசியதும், அனைவரும் சிரித்தனர் என்று, செய்தி தெரிவிக்கிறது.

"அரிசி வேண்டுமென்று ஆலாய்ப் பறக்கிறார்கள், தெற்கே உள்ளவர்கள்; வடக்கிலுள்ளவர்களே! நீங்கள் அரிசி உபயோகிப்பதை நிறுத்திக்கொண்டு, தெற்கே உள்ளவர்களுக்கு அரிசி கொடுங்கள்"—என்று பேசியிருப்பதில், 'போனால் போகிறது; கொடுத்துத் தொலையுங்கள்' என்ற தொனியே மேலோங்கி இருக்கிறது.

"அரிசி சாப்பிட்டாக வேண்டும் என்று தெற்கில் உள்ளவர்கள் இனியும் இருக்கக்கூடாது; கிடைப்பதைச் சாப்பிட வேண்டும்; வேறு உணவு தானியங்கள், காய்கறி இவைகளைச் சாப்பிட வேண்டும்" என்றும் நேரு பண்டிதர் யோசனை கூறியிருக்கிறார்.

கோதுமையைத் தமிழரின் தலையில் கட்டுவதற்கான திட்டமே, பண்டிதர் பேச்சிலே உள்ள சூட்சுமம் என்பது நன்கு தெரிகிறது.

பொதுவாகவே மக்கள் அதிகமான அளவு சாப்பிடுகிறார்களாம்!

'ஏன் இப்படிப் பெருந் திண்டிக்காரர்களாக இருக்கிறீர்கள்?' என்று கேட்கிறார் நேரு பண்டிதர்.

வாயைக் கட்டு! வயிற்றைக் கட்டு!—என்று உபதேசம் செய்திருக்கிறார்.

ஒருவேளைச் சோற்றுக்கும் வழியின்றி தவிக்கும் தமிழர்கள், 'அரிசி வேண்டும்' என்று கேட்கிறார்கள்; கருணைமூர்த்தி நேரு பண்டிதர்—வயிறு வெடிக்கச் சாப்பிடாதே! வாயைக் கட்டு! கிடைத்ததைச் சாப்பிட்டு விழுந்துகிட—என்று பேசுகிறார்.

ஆட்சி மொழிச் சிபாரிசுகளை ஆராயும்குழு

இந்தித் திணிப்புக் குழுவின் சிபாரிசுகளைப் பரிசீலிப்பதற்காக அரசியல் சட்டப்படி நிறுவப்பட்டுள்ள மக்கள் சபை உறுப்பினர்கள் குழுவிற்கு, தலைவராக பண்டித பந்த் இன்று ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படிருக்கிறார்.

இந்தக் குழுவின் முதற் கூட்டத்திலேயே, 1965-ம் ஆண்டுக்குள் இந்தியை ஆட்சிமொழி ஆக்குவதற்கு பலத்த எதிர்ப்புக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டதாகவும், ஆட்சிமொழிக் குழுவிற்குப் பிறகு, நாட்டு நிலைகள் மாறிவிட்டன என்றும், மாநில புனரமைப்பிற்குப் பிறகு நிலைமைகள் மாறியுள்ளன என்றும் அதனால், புதிதாக மீண்டும் ஆட்சிமொழி பற்றி கருத்தறியப்பட வேண்டும் என்றும் சில உறுப்பினர்கள் கருத்தறிவித்திருப்பதாயும் தெரியவருகிறது.

இந்திய விமான கார்ப்பரேஷனின் நஷ்டக் கணக்கு தொடர்கிறது

சென்ற ஆண்டு நஷ்டம் ரூ. 109 இலட்சம்

'ஏர் இந்தியா இன்டர் நேஷனல்' நிறுவனத்துக்கு 1956—57-ம் ஆண்டில் மட்டும் ரூ. 38.42 இலட்சம் நிகர லாபம் கிடைத்திருக்கிறது; அதே நேரத்தில், 'இந்தியன் ஏர்லைன்ஸ் கார்ப்பரேஷ'னுக்கு ரூ. 108.79 இலட்சம் நஷ்டமேற்பட்டிருக்கிறது என்று, மேற்படி கார்ப்பரேஷனின் 4-வது ஆண்டு அறிக்கை கூறுகிறது.

1955—56-ம் ஆண்டில் ஏர் இந்தியா இன்டர் நேஷனலுக்கு ரூ 3.78 இலட்சம் இலாபமும், அதே நேரத்தில் இந்தியன் ஏர்லைன்ஸ் கார்ப்பரேஷனுக்கு ரூ. 119.40 இலட்சம் நஷ்டமும் ஏற்பட்டது.

ஏர் இந்தியா கார்ப்பரேஷன் இந்திய அரசாங்கத்துக்குச் சொந்தமான நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது.

நம் நாடு
தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 18—11—57 திங்கள்

இரு செய்திகள்

★

வடக்கிற்கு தெற்கினை நிரந்தரமான அடிமையாக்கிவிட— ஏக இந்திய அரசியல் அமைப்பிற்கு உறுதி பூச, சம்பிரதாய மானவற்றை மட்டுமின்றி நவீனமான 'யந்திரங்'களையும் தேடியலைகிற பெரியவர்களும், இரு துருவங்களை இணைக்க, இணைக்கேற்றுகளைக் 'கண்டுபிடிக்க முயலும் புத்திசாலிகளும், தங்களுக்குள்ள அவசரத்தில், இருக்கிற பிளவுகள் அகலமாகிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமே என்று கவலைப்படக்கூட மறந்துவிடுகின்றனர்.

'இந்தியா' அரசியல் ரீதியாகவன்றி வேறெந்த வகையாலும் ஒன்றுபட்டிருக்கவில்லை என்பதை விளக்க இனியும் நாம் ஆதாரங்களைத் தேடித் தந்து கொண்டிருக்க முடியாது.

தற்காலிகமான அரசியல் சுயலாபத்திற்காக தென்னகத்தின் எதிர்கால வாழ்வையே வடநாட்டிற்குப் பலி தந்துவிடத் துணிந்துவிட்டவர்கள், எத்தனை ஆதாரங்களைக் காட்டினாலும், பார்க்காதவர்கள்போல நடித்துவரும் பாசாங்கினைக் கைவிட்டுவிடுவார்களா ?

இமயம் முதல் குமரிவரை வாழும் மக்கள் அனைவரும் பாரத புத்திரரே என்று சாதித்து, தென்னவரின் பழம்பெரும் பண்பினையும், பொறுமைப்படத்தக்க வரலாற்றையும் மறைத்துவிட முயற்சிக்கிறவர்கள் நெடுங்காலத்திற்கு, இந்த 'சாதனை'யை, தங்களது தன்மானத்திற்கு ஊறுதேடிக் கொள்ளாமல், கொண்டு செலுத்த முடியாது; இவர்கள், தெரியாத்தனமாகத் தவறு செய்கிறவர்களானால், சுட்டிக் காட்டப்படுகிறபொழுது, திருந்துவதற்கு மனப் பக்குவம் பெறுவார்கள். ஆனால், அரசியல் இலாபத்திற்காக, வேண்டுமென்றே தவறு செய்கிறவர்கள், இலாபத்தை இழக்கும்போதுதான் தவறுகளைக் காண்பர். ஆனால், இந்த நாட்டு மக்கள், இப்படித் தவறு இழைப்பதையே தொழிலாகக் கொண்டுவிட்டவர்களைக் கண்காணித்துவரத் தவறக்கூடாது. அதற்காகவே, இது சொந்த நாட்டில் பிழைப்புக்கு வழி இன்றி, அன்னிய நாடுகளுக்கு ஓடி—பிறந்த நாட்டின் 'இலட்சணம்' பற்றி இலவசமாக விளம்பரம் செய்து—ஒரு சாண் வயிற்றைக் கழுவிக்கொள்ள கசையடியும், தேள் கடியும் அனுபவிக்கும் கொடிய நிலை, பரந்த இந்தியத் துணைக்கண்டத்தில், தென்னாட்டவருக்கு— குறிப்பாக தமிழருக்கு மட்டுமே ஏற்பட்டிருக்கிறது.

இதுபற்றிச் சட்டசபையில் நமது கழகத்தவர் பேசிய போது, 'ஒரு காலத்தில் தமிழர்கள் ஓடியிருக்கலாம்; இப்போது இல்லை' என்று பதிலளித்தார், கனம் மந்திரி சுப்பிரமணியம்—வடநாட்டு எசமானர்களிடத்தில் தனக்குள்ள விசுவாசத்தின் அளவு வேறெந்த தென்னாட்டவரை யும்விட அதிகம் என்பதை இதுபோலச் சந்தர்ப்பங்களில் நிலைநாட்டிக்கொள்ளத் தவறாதவர்.

ஆனால், கனம் சுப்பிரமணியம் அவர்கள், 'இப்போது இல்லை' என்று மட்டும்தான் கூறினாரேயன்றி, ஏன் இல்லை என்பதைக் கூறவில்லை. இப்போது இருக்கிற தமிழர்களையே துரத்துகிற வெளிநாடுகள்தான் இருக்கின்றன; ஏற்றுக்கொள்பவை இல்லை. அதனால்தான், சட்டரீதியாக அனுமதி பெற்று தமிழர்கள் இலங்கை, மலாயா, சிங்கப்பூர் முதலிய நாடுகளுக்குப் பஞ்சப் பிரகடனம் செய்ய ஓடவில்லை.

பத்தாண்டுக்கால காங்கிரஸ் ஆட்சியில்—'ஏக இந்திய' நிர்வாகத்தில், அன்னிய நாடுகளுக்கு ஓடிப் பிழைப்புத் தேடுகிற அவலநிலை திராவிடர் சமுதாயத்தை விட்டு ஒழிந்துவிட்டதா என்றால், இல்லை.

கள்ளத்தனமாக இலங்கையில் குடிபுகும் 'இந்தியரி'ன் எண்ணிக்கை சென்ற ஆண்டினைவிட இந்த ஆண்டு அதிகரித்திருப்பதாக, கனம் சுப்பிரமணியத்தின் எஜமானபீடம் மக்கள் சபையில் தகவல் தந்திருக்கிறது, இரு நாட்களுக்கு முன்பு.

'கள்ளத்தோணி'களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரிக்கிறது என்பது, எசமானரின் தகவல். 'இப்போது இல்லை' என்பது, கழகம் இடித்துரைக்கும் உண்மையைப் பொய்யாக்க, அடிமை எடுத்துக்கொள்ளும் 'சாதுர்யமான' முயற்சி.

தென்னாட்டிற்கு மட்டும் ஏற்பட்டு, நீடித்து வதுத்துவரும் இந்த அவல நிலை, 'ஏக இந்தியா'க்களுக்கு, திறந்த மனமும் நேர்மைப் பண்பும் இருந்தாலன்றி புலப்பட நியாயம் இல்லைதான்.

கள்ளத்தோணிகளின் எண்ணிக்கை பெருகுகிறது என்பது தென்னாடு தரும செய்தி.

பஞ்சாப் கிராமம் ஒன்றில் நபர் விகித வருமானம் நான்கு மடங்கு பெருகியிருக்கிறது என்பது வடக்கு தரும் செய்தி.

ஏற்கனவே தென்னவரைவிடச் சிறந்த வாழ்வு பெற்றிருக்கும் வடவரின் வாழ்வை மேலும் செழுமையாக்க, அந்த வாழ்வுக்கு உத்தரவாதம் அளிக்க டெல்லி எல்லா முயற்சிகளும் செய்துவிட்டது.

அந்த முயற்சிக்கு, உள்ள வாழ்வையும் பலி தந்துவிட்டு, கள்ளத்தோணி ஏறுகின்றனர் தென்னாட்டவர்.

இதுதான், இந்தஇரு செய்திகள் கூறும் உண்மை. இந்த உண்மையை மக்கள்—தமிழர் உணருவதில் காட்டும் அவசரத்தைப் பொறுத்துதான், அவர்களின் எதிர்கால வாழ்வின் சிறப்பு இருக்கிறது. இதுபற்றித் தவிர, 'ஏக இந்தியா'வைக் காப்பாற்றிவிட, எத்தனை பெரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதைப் பற்றியும் நாம் கவலைப்படத் தேவையில்லை.

பர்மாவில் நிலம் பறிகொடுத்த 'இந்தியர்'

நஷ்ட ஈடு பெறவேண்டியவர் பற்றி விபரம் தெரியாதாம்

168 பேர்களுக்கே இதுவரை நஷ்டஈடு கிடைத்துள்ளதாம்

மக்கள் சபையில் தகவல்

பர்மாவில் நிலம் படைத்திருந்த 'இந்தியர் நிலங்கள் தேசியமயமாக்கப்பட்டதை ஒட்டி 168 பேர்களுக்கு மட்டுமே நஷ்டஈடு வழங்கப்பட்டிருக்கிறதாம்.

இன்னும் எத்தனைப் பேருக்கு நஷ்டஈடு கிடைக்கவில்லை என்ற விவரம் தங்களுக்குத் தெரியாதாம் !

இந்தத் தகவலை சதத் அலிகான் என்ற வெளிவிவகார இலாகா பாராளுமன்றச் செயலாளர் தெரிவித்திருக்கிறார்.

"நஷ்டஈடுபற்றி, நிலம் இழந்த இந்தியர்கள் திருப்தியடைந்துள்ளனரா?" என்று கேட்கப்பட்டபோது, 'இதில் நமது கொள்கை என்ன என்பதை இப்போது என்னால் சொல்லுவதற்கு இல்லை' என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

'நஷ்டஈடுபெற்றவர்கள் அந்தத் தொகையுடன் தாயகம் திரும்ப பர்மா சர்க்காருக்கு மனுச் செய்துள்ளனர்' என்றும், இந்தியத் தூதுவர் அலுவலகம் அவர்களுக்கு உதவி வருகின்றது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

தென் மாநில சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள்

மேற்கொண்டு டெல்லி உதவி

பெங்களூர், நவ. 15—

சென்னை—ஆந்திரா, மைசூர், கேரளம் ஆகிய மாநிலங்களுக்கு உடனடியாகப் பலனளிக்கும் நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு மத்திய சர்க்காரிலிருந்து அதிகப்படியாக ஒரு கோடி ரூபாய் மானியமாகவும், கடனாகவும் கிடைக்கும் என்று தெரிகிறது.

ஏற்கெனவே, ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது நினைவிருக்கலாம்; இத்திட்டங்கள் நடப்பு ஆண்டிலேயே முடிவடைந்துவிட வேண்டும்.

ஆயுள் தண்டனை அனுபவிப்போர்

எண்ணிக்கை பற்றித் தகவல்

சென்னை, நவ. 15—

மாநில மத்திய சிறையில் மொத்தம் 1,487 பேர் ஆயுள் தண்டனை அனுபவித்து வருகின்றனர் என்றும், அவர்களில் 30 பேர் பெண்கள் என்றும் சட்டமன்றத்தில் போலீஸ் அமைச்சர் பக்தவத்சலம் கேள்வி நேரத்தின் போது தெரிவித்தார்.

கொலைக் குற்றத்திற்காகவும், சதி குற்றத்திற்காகவும் 12 கம்யூனிஸ்டுகள் ஆயுள் தண்டனை அனுபவித்து வருகின்றனர் என்றும் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பியின் கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் கூறினர்.

வற்புறுத்தியும் கேட்கவில்லையாம் !

பஞ்சாயத்துத் திட்டம் பற்றி அமைச்சர்

சென்னை, நவ. 15—

"பஞ்சாயத்து நிறுவனங்கள் நல்ல முறையில் இயங்க, உள்ளாட்சி நிறுவனக் கண்காணிப்பாளர் தீட்டிய திட்டமொன்றை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இணைக்க வேண்டும் என்று வற்புறுத்தியும்கூட, திட்டத்தில் அது சேர்க்கப்படவில்லை" என்ற தகவலை சட்டமன்றத்தில் உள்ளாட்சி இலாகா அமைச்சர் லூர்து அம்மையார் வெளியிட்டார்.

வருமுன் காக்க !

சென்னை, நவ. 15—

அதிக மழையின் காரணமாகவும், வெள்ளத்தின் காரணமாகவும், கரையில் உடைப்புகள் ஏற்பட்டு பயிர்களுக்கும், மக்கள் குடியிருப்புகளுக்கும் சேதம் விளைவது பற்றி சட்டமன்றத்தில் திரு. கோவிந்தசாமி நாயுடு அவர்கள், 40-வது விதியின்கீழ் அமைச்சரிடம் வினவினர்.

'கரையைப் பலப்படுத்தவும், வெள்ளம் வருமுன் செய்யவேண்டிய வேலைகள் அனைத்தையும் அரசாங்கம் செய்துவருகிறது' என்று அமைச்சர் மாணிக்கவேலர் அறிவித்தார்.

சட்டக் கல்லூரியில் கல்விச் சலுகை

'பின்தங்கிய வகுப்பினருக்கு இல்லை' என்கிறார் மந்திரி

சென்னை, நவ. 15—

1955—56-ம் ஆண்டில் 1,290 ஆண்கள், 21 பெண்கள்—ஆக மொத்தம் 1,311 பேர் சட்டக் கல்லூரியில் அனுமதிக்கப்பட்டனர் என்றும், 173 பேர்களுக்குக் கல்விக் கட்டணச் சலுகை தரப்பட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

"பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கல்விச் சலுகை தரப்படுமா ?" என்று, தோழர் ஏ. கோவிந்தசாமி கேட்டார்.

'இல்லை' என்று அமைச்சர் பதிலளித்தார்.

உப மானியக் கோரிக்கை

ஏ. கோவிந்தசாமி, ப. உ. சண்முகம், பி. எஸ். சந்தானம் பேச்சு

சென்னை, நவ. 15—

1957—58-ம் ஆண்டுக்கான அதிகச் செலவுகளை ஈடுசெய்ய நிதி அமைச்சர் சுப்பிரமணியம், உதவி மானியக் கோரிக்கைகளை சட்டமன்றத்தில் கொண்டுவந்தார்.

விவாதத்தில், தோழர்கள் ப. உ. சண்முகம், ஏ. கோவிந்தசாமி, பி. எஸ். சந்தானம் ஆகியவர்கள் கலந்துகொண்டு கருத்தறிவித்தனர்.

தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

ஓராசிரியர் குறைகளைப் போக்குவதாக வாக்குறுதியளித்த அரசாங்கம், இப்போது அவர்களை மீண்டும் 2 ஆண்டுகள் பயிற்சி பெற வேண்டும் என்று கூறுவது கொடுமையானதாகும்.

"திருச்சியிலுள்ள இராஜாஜி டி. பி. வைத்திய விடுதிக்கு ஏற்பட்டுள்ள ரூ. 50,000 பற்றாக் குறைக்கு ரூ. 20,000 தருவதில் பயனில்லை; முழுத் தொகையையும் தரவேண்டும்.

"நல்ல குடிதண்ணீர் கிடைக்கும் இடத்தைக் கண்டுபிடித்தே அங்கு கிணறுகளைத் தோண்ட வேண்டும்; திட்டத்தை நிறைவேற்றுவதாகக்கூறி, ஒப்புக்கு கிணறுகளைத் தோண்டிப் பயனில்லை."

★

தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் பேசுகையில், தென் ஆற்காடு மாவட்டத்தில் 1 மைல், 6 பர்லாங் தூரத்திற்கு மட்டுமே சாலை அமைக்கப்படுவதைக் குறிப்பிட்டு, 'மற்ற மாவட்டங்களில் 14, 15 மைல் தூரம் சாலை அமைக்கப்படும்போது தென் ஆற்காடு மட்டும் இம்மாதிரி புறக்கணிக்கப்படுவதேன்?' என்று கேட்டார்.

"நெல்லிக்குப்பத்தில் கரும்பு ஆலை உள்ளது. கரும்பு சேமிப்பு நிதியிலிருந்து பாரி கம்பெனியார் முழுத் தொகையைச் செலவிட்டு, சர்க்கரை போக்குவரத்திற்கு சுற்றுப்புறம் பகுதிகளிலுள்ள சாலைகளைச் சீர்படுத்தும் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும்.

"குறைந்த விலையில் உரம் தரவும், எண்ணெய் இயந்திரத்தின் விலையைக் கட்டுப்படுத்தவும், ஓராசிரியர்களின் குறைகளைப் போக்கவும் அரசாங்கம் முன்வர வேண்டும்."

மாணவர் விடுதிகளை அரசாங்கம் ஏற்பதை அவர் வரவேற்றதுடன், 'கிணறுகள் வெட்டுவதிலும், வீடுகள் கட்டுவதிலும், குடிசைத் தொழில்களை வளர்ச்சி அடையச் செய்வதிலும் தாமதம் கூடாது' என்று கூறினர்.

தோழர் பி. எஸ். சந்தானம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"தாழ்த்தப்பட்டவர்களுக்கு அரசாங்கம் நல்லதைச் செய்து, அவர்களை மனிதர்களாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்டவர்களுக்கு பாடுபடுவதாகக் கூறிவிட்டால் மட்டும்போதாது; அவர்கள் வாழும் பகுதியிலேயே அவர்களின் முன்னேற்றத்திற்காகத் திட்டங்கள் தீட்டிவிட்டால் மட்டும் தீர்ந்துவிடாது.

"சாதி இந்துக்கள் வாழும் பகுதியைத் தனியாக விட்டுவைப்பதும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு தீங்கிழைப்பதும் தீண்டாமைக்கு உயிர் கொடுப்பதாகும்.

"சாதி இந்துக்களிடையே உள்ள துவேஷ மனப்பான்மையை மாற்ற வேண்டும். சேரியில் மட்டும் தீண்டாமை ஒழிப்பு வேலை செய்துவிட்டால் என்ன பலன் ஏற்பட்டுவிட முடியும் ?

"தாழ்த்தப்பட்டவர்கள் செருப்பு போடக்கூடாது; சில தெருக்களில் நடக்கக்கூடாது என்ற நிலையை இன்னும் சில கயவர்கள் உண்டாக்கிவருகிறார்கள். எப்படி மதுவிலக்கு சட்டம் தீவிரமாக அமுல் நடத்தப்படுகிறதோ அவ்வாறு இந்தக் கொடுமையை ஒழிப்பதற்குச் சட்டம் தீவிரமாக்கப்பட வேண்டும். அப்போதுதான் சமூகம் நல்ல நிலைமைக்கு வரும்."

★

தாழ்த்தப்பட்டவர்களுக்கு அரசாங்கம் தக்க பாதுகாப்பையும், நல்ல திட்டங்களையும், தீண்டாமை ஒழிப்பு முறைகளையும் வகுக்கவில்லை; இனியாவது நல்ல முறையில் ஆக்கப்பணியில் ஈடுபட வேண்டும்" என்று வலியுறுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட வெட்டுப் பிரரேபணை மீது வாக்கெடுப்பு நடைபெற்றது.

தி. மு. கழக உறுப்பினர்கள் உள்பட 32 பேர் வெட்டுப் பிரரேபணைக்கு ஆதரவாகவும், 81 பேர் எதிர்த்தும் வாக்களித்தனர். வெட்டுப் பிரரேபணை தோல்வியுற, மானியக் கோரிக்கை நிறைவேறியது.

‘இளம் மாணவர்களை மூன்று மொழி பயிலச்சொல்வது பல மரம் பார்த்த தச்சன் கதையாகவே முடியும்’

‘அறிவு வளர்ச்சியைத் தடுக்கும்’

‘கல்வித் திட்டம்பற்றி நிபுணர் கண்காணிப்பு வேண்டும்’

சட்டசபையில் க. அன்பழகன் கருத்துரை

“ ‘நாட்டில் இவ்வளவு அறியாமை இருக்கிறதே?’ என்று கேட்டால், ‘மக்கள் படிக்கவில்லை’ என்று பதில்; ‘100-க்கு 80 பேர் தற்குறிகள்’ என்று பதில். ‘இதற்கு என்ன வழி ?’ என்ருல், ‘எல்லோரும் படிக்கவேண்டும்’ என்று பதில்; ‘எல்லோரும் படிக்க வழி என்ன?’ என்ருல், ‘கல்வித் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்’ என்று பதில்; ‘நிறைவேற்றுவதுதானே?’ என்ருல், ‘பணம் இல்லை’ என்று, பதில் முடிந்துவிடுகிறது.

“படிக்கப் பணம் இல்லாத காரணத்தால் நாட்டில் 80 சதவிகிதம் பேர் தற்குறிகள்; அதனுல் என்ன ஆகிறது ? மக்கள் ஜனநாயகப் பண்பைப் பெறவில்லை; இதன்விளைவாக, ஜனநாயக ஆட்சி இன்றையதினம் தடுமாறுகிறது.

“கல்வித்துறைக்குப் பிரமாதமான திட்டங்களையெல்லாம் போட்டுவிட்டு, ரூ. 1,100 கோடி செலவழிக்கப் போவதாக ஆசை காட்டி, ரூ. 350 கோடிக்கு இன்று வந்து அது நிற்கிறது. அதிலும் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு சிறு பங்குதான் கொடுக்கப்படும் என்று மத்திய சர்க்கார் சொன்னுல்—கல்வித் திட்டத்தை நிறைவேற்ற அதனுல் முடியவில்லை என்ருல் தங்களுடைய மதிப்பை உயர்த்திக் கொள்வதற்காகவாவது மத்திய சர்க்காருக்கு ஒரு வழிகாட்டும்படியாக இவர்கள் நடந்துகொள்ள வேண்டும்”

—இவ்வாறு, தோழர் க. அன்பழகன் அவர்கள், சட்டசபையில் கல்விபற்றிய ‘வெள்ளை அறிக்கை’யின்மீது நடந்த விவாதத்தின் போது பேசுகையில் குறிப்பிட்டார்.

“எத்தகைய நல்ல திருத்தங்களையும் சட்டமன்றத்தில் பேசிக்கொண்டிருக்கிற நேரத்தில், சட்டமன்றம் இதை விவாதிப்பதற்குதான் அதிக உரிமை பெற்றிருக்கிறதே தவிர, இந்த நாள் வரை விவாதிக்கிற முடிவுகள் அரசாங்கத்தாரால் ஏற்றுக்கொள்ளப்படும் என்று கருதியோ, அல்லது அதற்கான தக்கசூழ்நிலை இருப்பதாகவோ நான் உணரவில்லை. ஏனென்று கேட்டால், ஒரு வடிவத்தில் வைத்து இந்த வடிவத்தை நிறைவேற்றப் போகிறோம் என்ற நிலைமையிலே இன்று வழங்கியிருக்கிருர்கள்.

“உண்மையாகவே திருத்தத்தை நிறைவேற்ற வேண்டும். இந்தச் சட்டமன்றம் புதிதாக அமைந்திருக்கிறது என்ற காரணத்தால், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் முழுப்பிரதிநிதித்துவ உரிமையோடு அவர்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லி இந்த வெள்ளை அறிக்கையைத் திருத்துவதற்கு, மறுபடியும் ஒரு பொறுக்குக் குழுவோ அல்லது நிரந்தரக் குழுவோ அரசாங்கம் நியமிக்க முன்வந்திருந்தால் திருத்தங்கள் நிறைவேறும் என்ற கருத்தை நான் தெரிவிக்கின்றேன்.

“அமைச்சரவர்கள், இதையே ஒரு சட்டமாக ஆக்கக் கருதுவதாகக்கூறி, அதற்கான காரணங்களைச் சொல்லும்போது, ‘புதுப் புது அமைச்சர்கள் வரும்போதெல்லாம் தங்கள் தங்களுடைய திறமையைக் காட்டுவார்கள்; பல்வேறு திருத்தங்கள் செய்ய முன்வருவார்கள்; அதனுல் கல்வித்துறைக்குழப்பம் வரும்; அப்படி ஏற்படாமல் நான் ஒரு சட்டம் செய்துவிடலாம் என்று கருதுகிறேன்’ என்ற கருத்தைத் தெரிவித்தார்கள்.

“என்னைப் பொறுத்தவரையில் நான் கருதுவதெல்லாம், இப்பொழுது வந்திருக்கிற திட்டமானது, நிரந்தரமான நன்மை பயக்கும் என்ற முழு நம்பிக்கையை எப்படி நாம் பெறமுடியும் என்பதுதான். அந்த முழு நம்பிக்கையைப் பெறமுடியாதபோது, இதைச் சட்டமாக ஆக்குகிறோம் என்ருல், இதிலே தவறுகள் ஏராளமாக வருகிறபோது எளிதாகத் திருத்திக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டு, அரசியல் கட்சிகள் தங்கள் தங்கள் பலத்தைக் காட்டிக் கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படுமானுல் மேலும் பல பெரும் தவறுகள் ஏற்படும்.

“இன்றைத்தினம் இருக்கும் அமைச்சர் ஐந்து ஆண்டுகள் நிச்சயமாக இருப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது ஆகவே, மூன்று நான்கு ஆண்டு பயிற்சியிலே—அனுபவத்திலே பார்த்து, குற்றங்குறை இல்லை என்று கருதினுல், அப்பொழுது வேண்டுமானுல் ஒரு அடிப்படைச் சட்டத்தை (Basic Law என்ற அளவுக்குச் சட்டம்) கொண்டுவாலாமே தவிர, கடைசி வரையிலும் எல்லைவைத்து சட்டம் கொண்டுவருவது நல்லதும் அல்ல—தேவையுமல்ல.

“ஆளும் கட்சியினர் தக்க பலம் உள்ளவர்கள் என்ற காரணத்தால், ஒரு ‘கன்வென்ஷன்’ ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்; ‘பொதுவாகவே கல்வித்துறையில் அடிக்கடி அமைச்சர் தலையிடுவதில்லை—தலையிடுவது நிர்வாகத்தைப் பொறுத்து இருக்கலாமே தவிர, அதிலுள்ள பாடத் திட்டத்தைக் குறித்தோ, அமைப்பு முறையைக் குறித்தோ அடிக்கடி நாங்கள் தலையிடமாட்டோம்’ என்று இப்பொழுது உள்ள கல்வி அமைச்சர் நிர்ணயம் செய்து, அதனை, இனி வருகிற அமைச்சர்கள் பின்பற்றுமாறு ஒரு ‘கன்வென்ஷன்’ ஏற்படுத்துவது நல்லதே தவிர, சட்டத்தை ஏற்படுத்துவது அவ்வளவு நல்லதல்ல.

“மிகப் பெரிய மேதைகள் கூடி இந்தியாவின் அரசியல் சட்டத்தை—அல்லும் பகலும் முயற்சிசெய்து—திருத்தித் தந்தார்கள் என்ருலும், தேவைப்படாத பிரிவுகளை அரசியலமைப்புச் சட்டத்திலே அமைத்த காரணத்தால், 14 வயதுவரை கட்டாயக் கல்வி ஏற்பட வேண்டுமென்று அரசியலமைப்புச் சட்டத்திலே இருந்தும் அதை உண்மையாகவே மதிப்பவர்கள்கூட நிறைவேற்ற முடியாத நிலைமையை அவர்கள் ஏற்படுத்தியிருக்கிருர்கள். அரசியலமைப்பு மாருவிட்டாலும் அரசியலமைப்பை மாற்றுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அவ்வப்போது விரிவான சட்டம் கல்வித் துறையைப் பொறுத்தவரை நல்லதல்ல,

“சட்டமாக உருவாக்கிக்கொள்வது கல்வித் திட்டத்தை அரசியலுக்கு அடகு வைப்பதுபோல் ஆகிவிடும். இதேபோல், முன்னுல் கூடிய இந்தச் சபையில் இப்பொழுதிருக்கும் இதே கல்வி அமைச்சர், அப்பொழுது ஒரு திருத்தம் கொண்டுவந்தபோது, அது சட்டமாக்கப்படாமல் இருந்ததால் தமிழ்நாடு தப்பியது என்று நம்புகிறேன். சட்டமாகியிருந்தால், பிடிவாதம் அதிகமாகி தமிழ் நாட்டுக்குத் தீமை அதிகமாகி, கட்சி மாறுபாடுகள் வளர்ந்திருக்கக்கூடும். ஆகவே, அந்த அடிப்படையில் அனுபவம் பெற்ற பின்னர், தேவைப்படுகிற அளவுக்கு அடிப்படைச் சட்டத்தை நிறைவேற்றலாமே தவிர, ஒரேயடியாகச் சட்டம் தேவையில்லை.

“இன்றைய தினம் கல்வித் திட்டத்தைக் குறித்துத் திருத்தங்கள் செய்கிறபோது, சட்ட மன்றத்தின் ஓரளவு பிரதிநிதிகள் அதில் கலந்து தீர்மானிக்கக்கூடிய வாய்ப்புப் பெறும்படி, கல்வி அமைச்சர் அவர்கள் பொருளாதார முக்கியத்துவம், மற்ற எல்லாவற்றிற்கும் தலையாக இருக்கிற காரணத்தால்—நாம் ஒரு மாறி வருகிற சமுதாயத்தின் பிரதிநிதியாக இருக்கும் காரணத்தால்—கல்வித் திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டிய நினைவு பலருக்கு ஏற்படுகிற காரணத்தால்—ஒரு ‘ஸ்டாண்டிங் கமிட்டி’ என்ற பெயரால் நிலையான கல்விக் குழுவை—சட்ட மன்றப் பிரதிநிதிகள் மேல் சபையின் பிரதிநிதிகள் ஆகியோர் துணைகொண்டு ஏற்படுத்திக்கொள்வது நல்லது.

“மேல்நாட்டு நிபுணர்கள் அந்த நாட்டுப் பிள்ளைகளின் கல்வியின் தரத்தை எளிமையாகவும், அழகாகவும், தெளிவாகவும் அமைத்திருப்பதுபோல், இந்த நாட்டில் இன்னும் தோற்றுவிக்க முடியவில்லை. நிபுணர்களுக்குப் பஞ்சம் இருக்கின்ற இந்த நாட்டில்—ஆசிரியர்கள், மாணவர்களுக்கு தங்களுடைய கருத்துக்களை புத்தக வடிவிலே எடுத்துச் சொல்லுகிற பஞ்சம் இருக்கும் ஒரு நாட்டில் அரசாங்கம் இதை மேற்கொண்டு விடுமானுல், ‘டோடலிடேரியன் கவர்ன்மெண்ட்’—அதாவது, ஜெர்மன், ரஷ்ய நாடுகளில் எதேச்சாதிகார மனப்பான்மையுடன் ஆட்சியாளர்கள் கல்வியை தங்களுடைய கைக்கு முன்னுல் வைத்துக் கொண்டிருப்பதைப் போன்ற—ஒரு சூழ்நிலை இங்கே உருவாகலாம்.

“இன்றையதினம் இருக்கும் கல்வியமைச்சர் பரந்த மனப்பான்மையுடனிருக்கலாம்; நாளையதினம் வரப்போகும் கல்வியமைச்சர் எப்படி இருப்பாரோ தெரியாது. ஆகையினுல், தனிப்பட்டவர்கள் புத்தகங்கள் வெளியிடும் உரிமையில், எந்தக் காரணத்தை முன்னிட்டும் அரசாங்கம் குறுக்கிடவே கூடாது என்று நான் கருதுகிறேன்.

“அதனுல், தனிப்பட்ட முதலாளிகளுக்கு இடம் தருவதை நான் விருமபுகிறேன் என்பதல்ல. புத்தகங்கள் வெளியிடப்படும் பொழுது புத்தகங்களிலே உள்ள கருத்துக்களை புத்தகப் பரிசீலனைக் குழு நன்ருக ஆராய்ந்து, இவை இவை தான் ஒப்புக்கொள்ளக் கூடிய கருத்துக்கள் — இவை இவை ஒப்புக்கொள்ளக்கூடாத கருத்துக்கள் என்று முடிவு செய்வதைப்போல, குறைந்த விலையையும் தீர்மானம் செய்து அந்த விலைகளிலே கிடைக்கிற புத்தகங்களைக்கூட ஒரு ஆண்டுக்கு 12 அல்லது 24 புத்தகங்கள் என்று நிர்ணயித்து, ஒரு ஜில்லாவுக்கு இரண்டு புத்தகம்—இன்னின்ன வகுப்புக்கு இந்த இரண்டு புத்தகங்களைத்தான் பாடமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று நிர்ணயித்துவிட்டால், போட்டியை ஒரு கணிசமான அளவுக்கு முறைப்படுத்தி—ஒழுங்குபடுத்தி, நல்ல புத்தகங்கள் வெளிவருவதற்கு வாய்ப்பு அளிக்கலாம். 40 புத்தகங்கள் பரிசீலனைக்கு வந்தால்—24 சிறந்த புத்தகங்களை எடுத்துக்கொண்டு 16 புத்தகங்களைக் கைவிட்டுவிடுவார்கள் என்ற நிலைமை இருந்தால், அவரவர் போட்டி போட்டுக்கொண்டு சிறந்தமுறையில் புத்தகங்களை எழுதி, சிறந்தமுறையில் அச்சிட்டு, தக்க விலையில் தருவதற்கு ஏற்பாடு செய்வார்கள். அதற்குமேல் பள்ளிக்கூடங்களில் கூட்டுறவு சங்கங்கள் உருவாவதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டுமானுல் அத்தகைய நிலையங்கள் மூலமாகத்தான் புத்தகங்கள் விற்கப்படவேண்டுமே தவிர, தனிப்பட்டவர்கள் அவைகளை விற்கக்கூடாது என்ற ஏற்பாட்டைச் செய்யவேண்டும். இந்த முறையிலே இலாபத்தைக் குறைக்கலாமே தவிர—புத்தகத்தை வெளியிடும் முறையிலே தக்க கவனம் செலுத்தலாமே தவிர—நல்லதோர் குழுவைக் கொண்டு புத்தகங்களைக் கண்காணிக்கலாமே தவிர—இந்தப் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் அரசாங்கத்திற்குக் குறைதான் வளரும்.

“அடுத்து, இன்றைய தினம் கல்வித் துறையிலே இருக்கின்ற பெரிய பிரச்சினை, மொழியை எப்படிக் கற்றுக் கொடுப்பது—சொல்லித் தருவது என்பது. இந்தி படிக்கும்படி எந்த முறையிலே செய்வது; கெஞ்சிக் கேட்பதா மிஞ்சிச் சொல்லுவதா என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தி படிக்கச் செய்யவேண்டுமென்ற அக்கறையிலே இந்த நாட்டு அரசாங்கம் பங்கு எடுத்துக்கொள்ளக் கூடாது என்று நான் எண்ணுகிறேன்; இந்தியை வெறுப்பவன் என்ற காரணத்தினுல் அல்ல—மூன்று மொழிகளை தமிழ் நாட்டுப் பிள்ளைகள் கற்கவேண்டுமென்று சொல்வதைத் தவறு என்று கண்டிக்க வேண்டுமென்பதற்காகத்தான். இந்தியை வெறுப்பது அரசியல் அடிப்படையில் அல்ல; இந்தி கூடாது என்று சொல்லுவது, இந்தியின் செல்வாக்கு தமிழைத் தாழ்த்திவிடும் என்ற எண்ணத்தினுல் தான். Hindi or any other Indian Languvage என்ற குறிப்பிலே, இரண்டாவது மொழியாக இந்தி இடம்பெற்ற போதிலும், Hindi or any other Indian Languvage என்று குறிப்பிட்டிருக்கிற காரணத்தினுல்—முதல் மொழி இல்லாத பிறமொழி என்ற காரணத்தினுல்—அந்த நேரத்திலும் தாய்மொழி படிக்கும் வாய்ப்பு கெட்டு, வேறு எந்த மொழியையும் படிக்க வேண்டிய மனப்பான்மை சமஸ்கிருதப் பற்றுடைய பெரியவர்களுக்குக்கூட ஏற்படாத காரணத்தினுல்—இந்தியைப் படிக்க வேண்டுமென்ற அந்த மனப்பான்மை ஏற்படுகின்ற காரணத்தினுல் இந்தி புகுத்தப்படுகிறது என்பதைக் குறிப்பிடுகிறேன்.

“அரசாங்கத்தினுடைய கடமை இந்தியைப் புகுத்துவதாக இருந்தாலும்கூட, தமிழை அடிப்படையாக வைத்து எண்ணிப் பார்த்தால் தவறு புலனுகும். பிறநாடுகளில் 3 மொழிகளைப் படிக்கும் பிள்ளைகள், தனித் தனியாக எழுத்துக்களை (ஆல்பபெட்ஸ்) படிக்காமல் அடிப்படை எழுத்துக்களை—மூல எழுத்துக்களைப் படித்துவிட்டு, 2-3 மொழிகளைக் கற்கிருர்கள். அந்த மொழிகளுக்கிடையே ஒலி ஒற்றுமை இருக்கிறது; படிப்பதற்கும் எளிது.

“தமிழ்மொழியினுடைய அளவையும், தரத்தையும் எண்ணிப் பார்த்தால், தமிழ்மொழி படிப்பது இரண்டுமொழிகள் படிப்பதற்குச் சமமாகும்.

“இந்த நாட்டில் இதற்கு முன்னுலே ‘கிளாசிகல் லாங்குவேஜ்’ என்ற பெயரால்—புராதனமொழி என்ற பெயரால்—சமஸ்கிருதம் படித்தால்தான் பழங்கால நாகரீகங்களைத் தெரிந்துகொள்ளமுடியும்என்ற தவருன மனப்பான்மை புகுத்தப்பட்டு கல்வித்துறையில் அது இடம் பெற்றிருந்தது. தமிழைப் பொறுத்தவரையில் நான் சொல்வேன்—நவநாகரீக மொழியிலும் ஒன்று அது; புராதன மொழியிலும் ஒன்று அது. ‘மிகப் பழங்காலத்துப் பண்பாடு சிறந்த இலக்கியங்கள் தமிழில் இல்லை; வடமொழியில்தான் இருக்கின்றன’ என்ற கருத்தை தமிழ்ப் பண்பாட்டை உணர்ந்தவர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். எப்படி, ‘கிளாசிகல் லாங்குவேஜ்’ என்ருல் ‘சமஸ்கிருதம்’ என்று கருதும் மனப்பான்மை புகுத்தப்படுகிறதோ, அதுபோன்று, இந்தியாவுக்கு ஒருமொழி என்ருல் இந்தி படிக்கவேண்டும் என்ற கருத்தும், ‘இண்டர் நாஷனல் லாங்குவேஜ்’ என்ருல் ஆங்கிலத்தைப் படிக்கவேண்டும் என்ற நியாயமான கருத்தும், இவைகளெல்லாம் சேர்ந்து தமிழைப் படிக்கவேண்டுமென்ற ஒரு பெரிய பாரத்தை உண்டாக்குகிறது. எனவே, தமிழ்ப் பிள்ளைகள் 3 மொழி படிக்கவேண்டும் என்ற நிலைமை அடியோடு இருக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

“அடுத்தபடி சொல்லுவேன்—இந்த நாட்டு இளைஞர்களைப் பற்றியும், மாணவர்களைப் பற்றியும் ஆராய்ச்சி பூர்வமான கருத்து ‘5 வயது முதல் 15 வயதுவரையில் அறிவு ஏராளமாக வளருகிறது’ என்பதுதான்; இந்தப் பருவத்தில் 3 மொழி கற்க வேண்டுமென்ருல், அது அறிவு வளர்ச்சியைத் தடுத்துவிடும். அறிவு வளர்ச்சிக்குப் பலமொழிப் படிப்பு உதவாது. ‘பல மரம் கண்ட தச்சன் எந்த மரத்தையும் வெட்டுவதில்லை’ என்ற பழமொழி போல, அறிவு வளர்ச்சி ஏற்படும் போது மூன்று மொழி படித்தால், எந்த மொழியிலும் கவனம் செலுத்த முடியாத நிலை ஏற்படும்.

“அதற்கு அடுத்தபடியாக, ‘இந்த நாட்டில் நல்ல கல்வி அறிவை வளர்ப்பதற்கு—அதிலும் கட்டாயக் கல்வியை வளர்ப்பதற்கு 14 வயதுவரை கட்டாயக் கல்வியைப் போதிக்க வேண்டுமென்று அரசியல் அமைப்பில் கூறப்பட்டிருந்த போதிலும் நாம் அதை நிறைவேற்ற முடியாத நிலையிலிருக்கிறோம்’ என்ற கருத்தை—பணம் இல்லை என்கிற காரணத்தைக் காட்டி, அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். உண்மையில் 14 வயதுவரையில் கட்டாயக் கல்வி போதிக்கும் திட்டத்தை நம்மால் நிறைவேற்ற முடியாவிட்டாலும், ஒவ்வொரு கட்டமாக நிறைவேற்றுவதற்கு நாம் இன்றைக்கே வழிவகுத்தால் 14 வயதுக்குள் கட்டாயக் கல்வியைப் போதிக்க இன்றைக்கே 8 வயது மாணவர்களுக்கு எல்லாம் கல்வி அளிக்க ஏற்பாடு இருக்க வேண்டும்.

சர்க்காரின் நோக்கம் ஒவ்வொரு கிராமத்திலும் 5-வது வகுப்புவரை ஒரு பள்ளியை ஏற்படுத்துவதாகவும், இம்மாதிரியான 5 கிராமங்களைச் சேர்த்து அதற்கு நடுவில் எட்டாவது வகுப்பு வரையில் இருக்கும் ஒரு பள்ளிக்கூடத்தை ஏற்படுத்துவதாகவும் இம்மாதிரியான ஐந்தாறு பள்ளிகளுக்கு நடுவில்—எல்லார்க்கும் நடுவாக ஒரு இடத்தில் ஒரு உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்துவதாக

(4-ம் பக்கம் பார்க்க)

மலைப் பகுதி மக்கள் வாழும் நிலை

தரப்படும் உதவி மக்களுக்கு நல்ல அளவில் பயன்பட வேண்டும்

சட்டமன்றத்தில் தோழர் இருசப்பன் கோரிக்கை

சென்னை, நவ. 16—
இன்று சட்டமன்றத்தில் ரூ. 77 இலட்சம் நிதி ஒதுக்கல் மசோதா கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இந்த உதவி மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்தில் கழக உறுப்பினர் தோழர் இருசப்பன் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"ஏழைகளுக்கு—தாழ்த்தப்பட்டவர்களுக்கு உதவி என்ற பெயரில், இலட்சக்கணக்கில் பணம் ஒதுக்கப்படுகிறது. அந்தப் பணம் ஏழைகளுக்குக் கிடைக்கிறதா என்று நீங்கள் கவனிக்க வேண்டும். எட்டளவில் இன்று காணப்படுவதை காட்டில் நல்ல பலன் ஏற்படுமாறு செய்யுங்கள்.

"இன்று, வட்டார அபிவிருத்தித் திட்டத்தினால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிர்பார்த்த பயன் ஏற்படவில்லை. கிணறுகள் வெட்டவும், ஒதுங்குமிடங்கள் ஏற்படுத்தப்படவும்கூட நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை.

"காட்டில் உள்ள மிருகங்களைப் போல், மலைப்பகுதியில் வாழும் மக்கள் என் தொகுதியில் கஷ்டப்படுகின்றனர்.

"எங்கள் பகுதியில் கிடைக்கும் இயற்கைப் பொருள்கள் பற்றி இந்தச் சபையில் எடுத்துக் கூறப்பட்டது; இருந்தும், அந்தத் தொழிலை வளமாக்க திட்டத்தில் ஒன்றும் காணப்படவில்லை.

"தண்ணீர் இல்லாமலும் சாலைகள் இல்லாமலும் மக்கள் கஷ்டப்படுகிறார்கள்.

"வீடுகள் கட்டிக்கொள்ள ரூ. 200 முன்பணம் தரப்படுகிறது; ஆனால், ரூ. 700 செலவிட்டுக் கட்டித்தரப்படும் அந்த வீடுகள் மக்களுக்குப் பயன்படவில்லை; கட்டி முடிந்ததும் அவைகள் இடிந்துவிடுகின்றன.

"இவற்றையெல்லாம் கவனித்து, ஏழைகளுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இந்த அரசாங்கம் உதவியளிக்க முன்வர வேண்டும்; உதவியைப் பயன்படும் முறையில்—நல்ல முறையில் நிறைவேற்ற வேண்டும். சமுதாயம் சீர்பட இதுவே நல்வழியாகும்."

ரூ. 1 இலட்சம் செலவில்!

கோவில் கட்டப்போகிறார்களாம்!

சென்னை, நவ. 15—
பூண்டி நீர்த்தேக்கம் கட்டப்பட்டதன் விளைவாக அந்த இடத்திலிருந்த 'பாடல்பெற்ற' கோயில் ஒன்று மூழ்கிவிட்டதாகவும், அதற்குப் பதிலாக ஒரு இலட்ச ரூபாய் செலவில் வேறொரு புதிய கோவில் கட்டுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் பக்தவத்சலனார், மேல் சட்டசபையில் பேசுகையில் அறிவித்தார்.

114 கைத்துப்பாக்கிகட்கு அனுமதி தரப்பட்டதாம்!

அரசியல் தொடர்பைக்கூடக் கவனிப்பதில்லையாம்!

சென்னை, நவ. 15—
சென்னை மாநிலத்தில் 1957-ம் வரை 114 கைத்துப்பாக்கிகளுக்கு அனுமதி தரப்பட்டுள்ளது என்றும், அரசியல் தொடர்பைப் பற்றிக் கவனிக்காமல்கூடக் கைத்துப்பாக்கிகள் வைத்துக்கொள்ள அனுமதி தரப்படுகிறது என்றும் சட்டமன்றத்தில் போலீஸ் அமைச்சர் பக்தவத்சலம் கேள்வி நேரத்தின்போது தெரிவித்தார்.

குதிரைப் பந்தயம் ஏழைகளைப் பாதிக்காதாம்!

நல்ல குதிரைகள் வளர ஊக்கம் தருகிறார்களாம்!

காங்கிரஸ் அமைச்சரின் கூற்று

சென்னை, நவ. 16—
1949-ல் குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட வேண்டும் என்று சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது; அந்தச் சட்டத்தை இன்றுவரை அமுல் நடத்தாத காங்கிரஸ் அமைச்சரவை, எதிர்காலத்திலும் ஒழிக்கும் நோக்கமே இல்லை என்ற அளவில் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

"குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதில் தாமதம் காட்டிவரும் நிலை, அரசாங்கத்திற்கு அதில் பற்றில்லை என்பதைக் காட்டுவதாகாதா ?" என்று தோழர் க. அன்பழகன் அவர்கள், சட்டமன்றத்தில் கேட்டார்.

"பற்றில்லை என்பதல்ல; நல்ல குதிரைகள் இராணுவத்திற்குத் தேவைப்படுகின்றன; அதனால் குதிரை வளர்ப்பு நல்லபடி நடக்கிறது" என்று அமைச்சர் பதிலளித்தார்.

"இந்த நல்ல குதிரைகளை வளர்க்கும் அரசாங்கம், பல நல்லகுடும்பங்கள் நாசமாவதை உணர்கிறதா ?"
என்று, தோழர் ஏ. கோவிந்தசாமி கேட்டார்.

"குதிரைப் பந்தயக் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறோம்; ஏழைகள் பாதிக்கப்பட மாட்டார்கள்" என்று அமைச்சர் கூறினார்.

"இதனால் எத்தனை குடும்பங்கள் பாதிக்கப்பட்டன என்ற புள்ளிவிவரத்தை அமைச்சர் தருவாரா ?"
என்று தோழர் க. அன்பழகன் கேட்டார்.

'என்னிடம் புள்ளிவிவரமில்லை' என்றார் அமைச்சர்.

கழகக் கூட்டங்கள்

★

கே. ஆர். தோப்பூர்
(சேலம் மாவட்டம்)
20—11—57 மாலை 5½மணிக்கு
தலைவர் : டி. எம். மாரிமுத்து
பேசுபவர் :
சிற்றுளி-சுப்பிரமணியம்

★

நெல்லிக்குப்பம்
ஜம்புலிங்கம் பூங்கா திடலில்
20—11—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : துரை எத்திராசன்
பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
காஞ்சி-கல்யாணசுந்தரம்
வே. கிருட்டினமூர்த்தி

★

கடலூர்
மஞ்சைநகர் மைதானத்தில்
20—11—57 இரவு 9 மணிக்கு
தலைவர் : இரே. இளம்வழுதி
பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
அறிவுடைநம்பி
கே. எம். வேலு எம்.சி.

முக்கிய அறிவிப்பு

நாஞ்சில் மாவட்ட மாநாடு டிசம்பர் 27, 28 தேதிகளில் கிருஷ்ணன்கோவிலில் நடைபெறவிருக்கிறது. மாநாட்டில் ஸ்டால் தேவைப்படுவோர் உடனடியாகக் கீழ்க்காணும் முகவரிக்குத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். முந்துங்கள்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :—

ஏ. இராமசாமி, செயலாளர்,
நாஞ்சில் மாவட்ட தி. மு. க.
அரசியல் மாநாடு,
நாகர்கோவில்

என்று, நாஞ்சில் மாவட்ட தி. மு. க. 2-வது அரசியல் மாநாட்டுச் செயலாளர்கள் ஏ. இராமசாமி, பி. சாம் ஆகியோர் அறிவிக்கின்றனர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

பொன்னம்பலனார் வருகை

மலாயா, சிங்கப்பூர் நாடுகளில் கடந்த ஆறுமாத காலமாகத் தங்கியிருந்து சிறப்பான தொண்டாற்றிவிட்டுத் தாயகம் திரும்பும் அ. பொன்னம்பலனார் அவர்கள், 'எஸ். எஸ். ஸ்டேட் ஆப் மதராஸ்' கப்பல் மூலம் சென்னைத் துறைமுகத்திற்கு 20—11—57 புதனன்று காலை 7 மணியளவில் வந்து சேருவார்கள்.

சென்னையில் உள்ள கழகத் தோழர்களும், சார்பு மன்றங்கள் படிப்பகங்களைச் சேர்ந்த தோழர்களும் அன்று காலை துறைமுகம் சென்று, திரு. பொன்னம்பலனார் அவர்களுக்குச் சிறப்பான வரவேற்பளிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

'அறிவகம்' சென்னை 18-11-57 } தலைமை நிலையம், (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஆசிரியர்களுக்குத் தரப்படும் ஊதியம் போதுமானதுதானாம்!

கல்வி அமைச்சர் கூறுகிறார்

சென்னை, நவ. 16—
ஆசிரியர்கள் வேலைக்கு, படித்துப் பட்டம் பெற்றவர்கள் அதிகம் வருவதில்லை என்பதை நிதி அமைச்சர் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

இதனால், வேலையில்லாத் திண்டாட்டம் படித்தவர்களிடையே இல்லை என்ற அவசர முடிவையும் தெரிவித்தார்.

"ஆசிரியர்களுக்குத் தரப்படும் ஊதியம் மிகவும் குறைவு என்பதுதான் இதற்குக் காரணம் என்பதை அரசாங்கம் உணரவில்லையா"
என்று, தோழர் ஏ. கோவிந்தசாமி கேட்டார்.

"ஆசிரியர்களுக்குத் தரப்படும் ஊதியம் போதுமானது" என்று அமைச்சர் பதிலளித்தார்.

பத்தாண்டுக்காலமாக முடிவாகாத வழக்குகள்!

சென்னை, நவ. 16—
"கடந்த பத்தாண்டுக்காலமாக தீர்க்கப்படாத வழக்குகளின் எண்ணிக்கை 6" என்று, உள் விவகார அமைச்சர் பக்தவத்சலம், சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

அரசாங்கக் கல்லூரி மாணவிகளுக்கு விடுதி

சென்னை, நவ. 16—
"சென்னை அரசாங்க எஸ்டேட்டில் ரூ. 8,55,000 செலவில் அரசாங்கக் கல்லூரி மாணவிகளுக்காக ஒரு விடுதி கட்டப்பட்டு வருகிறது" என்று, கல்வி அமைச்சர் சுப்பிரமணியம், சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின் போது தெரிவித்தார்.

சட்ட சபையில் க. அன்பழகன்

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வும் இருக்கவேண்டும். இப்படிச் செய்தால், ஒரு வட்டாரத்தில் எல்லா மாணவர்களுக்கும் வசதியாகப் படிப்பதற்கு முடியும். யாரும் பள்ளிக்கூடம் அதிக தூரத்தில் இருக்கிறது என்ற காரணத்தால், படிக்க முடியவில்லை என்று குறைபட்டுக் கொள்ளாத நிலையை உண்டாக்கவும் முடியும்.

"அடுத்தபடியாக, 'பைபர்கேட்டெட் கோர்ஸ்' என்பதாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். தொழில் துறைக் கல்வி 9, 10, 11-வது வகுப்புகளில் மூன்றாண்டுக்கு ஏற்படுத்துவது நல்லதாக இருக்கலாம். எட்டாவது வகுப்பு வரையில், மற்ற துறையில் பயிற்சி அளிப்பதுதான் ஓரளவு பொருத்தமாக இருக்கக்கூடும்.

"அதுமட்டுமல்ல; எட்டாவது வகுப்பு முடிவில், 'தனிப் பரீட்சை' என்று இருந்ததின் தரத்தை இன்றைய தினம் ஓரளவு உயர்த்தியிருக்கிறார்கள். தரத்தை உயர்த்தும் இடத்தில் பரீட்சை வைக்க முன்வந்தால் அந்த இடத்துப் பரீட்சையை எழுதிவிட்டு 'சர்டிபிகேட்' வாங்கிவிட்டு நின்றால்போதும் எனப் பலர் நின்று, வேறு துறைகளில் புகுந்துவிடக்கூடும். இது அவரவர்களுக்கு இடம் தருவதாயிருக்கும்.

"இவற்றோடு, ஆதாரக் கல்வியை ஒன்றுபடுத்தும் திட்டம் போட்டிருக்கிறார்கள். பல குறைபாடுகளுடையதாய் இது இருந்தால், இத்திட்டம் பயனளிக்குமா என்று கேட்டுக் கொள்கிறேன். இத்திட்டத்தைப் பற்றி தெளிவான முறையில் விளக்கப்படவில்லை; பலருக்குப் புரியவுமில்லை. இவற்றைப் பற்றியெல்லாம் விரிவாகப் பேச நேரமில்லை.

"ஓராசிரியர் பள்ளிகளில் பணியாற்றுகிறவர்களுடைய குறைகளும் இன்னும் தீர்க்கப்படவில்லை. முன்பு அது பற்றிக் கேட்டபோது, 'விரைவிலேயே அந்தக் குறை தீர்க்கப்படும்' என்று அமைச்சர் சொன்னார்; அமைச்சர் சொன்னார்—என்று, நாங்களும் நம்பித்தான் இருந்து கொண்டிருக்கிறோம். அது எப்போது நிவர்த்தி செய்யப்படும் என்ற நிலைமை தெரியாது இருக்க, 18 ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டு வீட்டில் கிண்ணியைக் கொடுத்துவிட்டு பள்ளிக்கும்போகும் நிலைமைதான் நீடித்துக் கொண்டிருக்கிறது."

'தினமணி' செய்தி பற்றி உரிமைப் பிரச்சினை

சட்டமன்றத் தலைவரிடம் ஆசைத்தம்பி கோரிக்கை

சென்னை, நவ. 16—
11—11—57 அன்று தேசிய கௌரவ அவமதிப்புத் தடுப்புச் சட்டத்தை எதிர்த்து அண்ணா அவர்கள் பேசியதை, தவறாக வெளியிட்ட 'தினமணி' பற்றி, ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டுவர தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள், சட்டமன்றத் தலைவரிடம் அறிவித்திருந்தார்.

இதற்கிடையில், 'தினமணி' திருத்தம் வெளியிட்டுவிட்டது; உரிமைப் பிரேரணை அனுமதிக்கப்படவில்லை.

சட்டமன்றக் கூட்டம்

சபைத் தலைவர் நன்றியறிவிப்பு

சென்னை, நவ. 16—
சென்ற திங்கள் 25-ந் தேதி முதல் தொடர்ச்சியாக நடைபெற்றுவந்த சட்ட மன்றக் கூட்டம் இன்று கலைந்தது.

இந்தத் தடவை எல்லாக் கட்சியினரும் உயர்ந்த முறையில், சபையின் கௌரவத்தைக் காக்கும் வகையில் தனக்கு ஒத்துழைப்பு தந்ததற்காக மன்றத் தலைவர் திரு. யு. கிருஷ்ணாராவ் எல்லோருக்கும் நன்றி தெரிவித்தார்.

படாஸ்கர் தீர்ப்பு

ஆந்திரர் கண்ணோட்டம்

ஐதராபாத், நவ. 18—
சென்னை—ஆந்திர எல்லைத் தகராறுபற்றி படாஸ்கர் அளித்த முடிவுகள் பற்றி ஆந்திர மாநில சட்டமன்றம் விவாதித்து ஏற்றுக் கொண்டுள்ளது.

விவாதத்தில் கலந்து கொண்டவர்களில் சிலர், ஒசூர், ஆந்திராவுடன் சேரவேண்டும் என்று கருத்தறிவித்தனர்.

படாஸ்கர் தீர்ப்பின் அடிப்படையில் சென்னை மாநிலத்திலிருந்து 313 சதுரமைல் ஆந்திராவுக்கும், 321 சதுரமைல் ஆந்திராவிலிருந்து சென்னைக்கும் மாற்றப்படுகிறது.

ஆந்திராவிலிருந்து, 77,000 தெலுங்கர் உள்பட 2,50,000 பேர் சென்னைக்கும், சென்னையிலிருந்து 61,000 தெலுங்கர் உள்பட 1,50,000 பேர் ஆந்திர மாநிலத்திற்கும் மாற்றப்படுகின்றனர்.

ஆளில்லா விமானம்!

இடத்தைக் குறி தவறாமல் தாக்குமாம்!

சிகாகோ, நவ. 18—
5,000 மைல்களுக்கு அப்பால் உள்ள இடத்தை குறி தவறாமல் தாக்கும் ஒரு ஆளில்லா விமானத்தை, அமெரிக்க விமானப் படை கண்டுபிடித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய கல்வி இலாகாவில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதழ், மேலும் அவர் நான்கு டெலிவிஷன் செட்டுகள் வாங்கக் கூடிய அளவு பத்தாயிரம் ரூபிள் வரை, ஒரு பெண்ணுக்கு, ஜார்ஜியாவில் உள்ள தொழிற்பள்ளி ஒன்றில் இடம் பெற்றுத் தருவதற்காக இலஞ்சம் வாங்கினார் என்றும் குற்றம் சாட்டியிருக்கிறது.

கல்வி இலாகாவைச் சேர்ந்த பல அதிகாரிகள் இந்தத் தவறினைச் செய்கிறார்களாம்!

க. அன்பழகன்

எம்.எல்.ஏ., சுற்றுப்பயணம்

நவம்பர்
19 : தலைஞாயிறு (திருத்துறைப்பூண்டி)
20 : திருமங்கைச்சேரி (குத்தாலம்)
21 : சென்னை
22, 23, 24 : சேலம் மாவட்டம்

பந்தநல்லூரில் கழகக் கொடியேற்றுவிழா

20—11—57 மாலை 5-மணிக்கு பந்தநல்லூர் தி. மு. கழகக் கிளையின் சார்பில் தோழர் க. அன்பழகன் எம்.எல்.ஏ. அவர்கள் பல இடங்களில் கொடியேற்றி வைப்பார்.

இலக்கியச் சொற்பொழிவுக் கூட்டத் தொடக்கவிழா

19—11—57 மாலை 6-30 மணிக்கு மதுரை இராமாயணச் சாவடி மண்டபத்தில் இருளப்பகோனார் நினைவுப் படிப்பகச் சார்பில் இலக்கியச் சொற்பொழிவுக் கூட்டத் தொடக்கவிழா நடைபெறும். கி. பழனியப்பன் தலைமை வகிப்பார். திரு. அ. கி. பரந்தாமனார் விழாவைத் தொடக்கிவைப்பார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.